தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 20, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 நவம்பர் 6, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்

அருமை உடைய செயல்".

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.*

61—

பயணிகள் விடுதி

***23316—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு வத்தலக்குண்டில் 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் வத்தலக்குண்டில் தங்குவதற்கு 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.

[2003 நவம்பர் 6

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய இந்தியாவின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சர்வதேச உல்லாசத் தலமாக விளங்கக் கூடிய கொடைக்கானலில் தங்க முடியாத உல்லாசப் பயணிகள் வத்தலக்குண்டில் வந்து தங்குகிறார்கள். வளர்ந்துவரும் வத்தலக்குண்டில் சி.எஸ்.டி. ஹோட்டல், மதுரை முனியாண்டி விலாஸ், இரத்தினம் ஹோட்டல் உட்பட சுமார் 15 தனியார் தங்கும் விடுதிகள் இருக்கின்றன. இந்தத் தங்கும் விடுதிகள் அனைத்திலும் பயணிகள் தங்கிச் செல்கிறார்கள். இடம் இல்லாத காரணத்தால் வத்தலக்குண்டு பேருந்து நிலையத்திலே பிளாட்பாரத்திலே தங்குகிறார்கள். ஆகவே அதன் முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்திய துணைக் கண்டத்திலேயே தலைசிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், 'இல்லை' என்ற சொல்லுக்கு 'இடமில்லை' என்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டிலாவது நிதி நிலையைப் பொறுத்து வத்தலக்குண்டிலே 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டுவதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

• **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலக்குண்டு கொடைக்கானலிலிருந்து 58 கி.மீ. தொலைவில் உள்ளது. கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள தட்பவெப்ப நிலையை அனுபவிக்க வருகிறார்கள். எனவே அவர்கள் வத்தலக்குண்டு சென்று தங்கமாட்டார்கள். கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஹோட்டலில் 73 அறைகள் உள்ளன. அங்குள்ள இளைஞர் விடுதியில் இரண்டு படுக்கைகள் கொண்ட 3 அறைகளும், மேலும் 20 படுக்கைகள் கொண்ட 7 இளைஞர் துயிலகக் கூடங்களும் உள்ளன. மற்றும் தனியார் ஹோட்டல்கள் பலவும் உள்ளன. மேற்கொண்டு வத்தலக்குண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 'ஹோட்டல் தமிழ்நாடு' விடுதி கட்டும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வத்தலக்குண்டில் தனியார் விடுதிகள் நட்சத்திரத் தகுதியிலும் மற்றும் சாதாரண விடுதிகளும் நிறைய இருந்தபோதிலும், வெளி மாநில மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அரசு விடுதிகளில் தங்குவது பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுவதால், வத்தலக்குண்டில் 'ஹோட்டல் தமிழ்நாடு' கட்டும் செயற்குறிப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நிதிநிலைக்கேற்ப அரசு சிந்திக்கும்.

2003 நவம்பர் 6]

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

62—

நினைவுச் சின்னம்

***32886—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்தில் மகாகவி ,பாரதியாரின் தந்தையாரால் தொடங்கப்பட்ட நூற்பாலை இருந்த இடத்தை அரசு கையகப்படுத்தி நினைவுச் சின்னமாகப் பராமரிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தொண்டனுக்கும் தன்னுடைய அமைச்சரவையிலே செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராகப் பணியாற்றுகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தமைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10-05

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய தந்தையார் சின்னசாமி ஐயர் அவர்களால் ஒரு Ginning factory ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கிலும், அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், பங்கு ஒன்றுக்கு ரூபாய் 100/- வீதம் வசூல்